


34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com




நதி: 34 | பாலம்: 07 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 01, 2024

# சமூகப் பராமரிப்பிற்கு பல பில்லியன் டொலர்கள்!

ஒன்ராறியோ மாகாண பழமைவாதக்கட்சி அரசின் நிதி அமைச்சர் பீட்டர் பெத்லென்ஃபால்வி (Peter Bethlenfalvy) 2024 மார்ச் 26ஆம் திகதி மாகாண சட்ட மன்றத்தில் 2024-2025ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் $214.5 பில்லியன் டொலர் செலவினங்கள் அடங்கியுள்ளது. இதுவே ஒன்ராறியோவின் வரலாற்றில் அதிகூடிய செலவினங்களைக் கொண்ட வரவு-செலவுத் திட்டமாகும்.

நாட்டின் பொருளாதார நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில் எதிர்பார்த்ததைவிட அதிகூடிய பற்றாக்குறையுடன் இந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 200 பக்கங்களைக் கொண்ட இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கை 2024-2025ஆம் நிதியாண்டில் $9.8 பில்லியன் துண்டு விழும் தொகையாக இருக்கும் என எதிர்வு கூறுகிறது. கடந்த 2023-2024ஆம் நிதி யாண்டில் துண்டுவிழுந்த $3 பில்லியனை விட 2024-2025ஆம் நிதி யாண்டில் மூன்று மடங்கிற்கு மேல் துண்டுவிழுவது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு நிதி அமைச்சர் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கும்போது 2024-2025ஆம் நிதியாண்டில் $200 மில்லியன் மேலதிக வரவு ஏற்படும் என எதிர்வு கூறியிருந்தார்.

தற்போது 2025-2026ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டமும் $4.6 பில்லியன் துண்டுவிழும் தொகையைக் கொண்டிருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் 2025-2026ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் $ 4.4 பில்லியன் மேலதிக வரவைக் காட்டும் எனக் கூறப்பட்டிருந்தது.

தற்போது 2026-2027ஆம் நிதி ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் $500 மில்லியன் மேலதிக வரவு எதிர்பார்க்கப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2026-2027ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் ஒன்ராறியோ மாகாணத்தின் அடுத்த தேர்தலுக்கு முந்தைய வரவு-செலவுத் திட்டமாகும்.


Finance Minister Peter Bethlenfalvy and Premier Doug Ford

நிதி அமைச்சின் அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், பொருளாதார வளர்ச்சிக் குறைவால் அரசின் வரி வருவாய் குறைந்ததும், கனடிய மத்திய அரசின் வெளிநாட்டு மாணவர்களின் அனுமதியில் ஏற்பட்ட குறைவால் வருவாய் குறைந்ததும், பொதுத்துறைப் பணியாட்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் ஏற்பட்ட அதிகரிப்பும், எரிபொருட்களுக்கான வரிக் குறைப்பைத் தொடர்ந்து மக்களுக்கு வழங்குவதால் ஏற்பட்ட வருவாய் குறைவும், மற்றும் உட்கட்டமைப்புகளுக்கு மேலதிக செலவுகளைப் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் அனுமதித்ததுமே 2024-2025ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மேலதிக பற்றாக் குறை ஏற்பட்டதற்கான காரணம் என்றார்.

ஒன்ராறியோ மாகாண அரசின் ஊதியக் கட்டுப்பாட்டுச்சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானது என நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து மாகாண அரசு கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டிற்கான ஊதியமாக பொதுத்துறை பணியாட்களுக்கு $6 பில்லியன் மேலதிக கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தது.

நிதி அமைச்சர் பீட்டர் பெத்லென்ஃபால்வி ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது, “இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நாங்கள் வழங்கும் முதலீடுகள் ஒன்ராறியோவைக் கட்டியெழுப்புவதற்கான எங்கள் உறுதிப்பாட்டின் எடுத்துக்காட்டு ஆகும். அதேநேரத்தில் மக்களின் பொதுப் பணத்தை விவேகமான முறையில் திட்ட மிட்டு பொறுப்புடன் கையாள்கிறோம். மிக முக்கியமான திட்டங்களில் முதலீடு செய்வதிலிருந்து நாங்கள் பின்வாங்க வில்லை. அத்துடன் பொதுமக்கள் மீதான வரிச்சுமையை அதிகரிக்கப் போவதும் இல்லை” என்றார்.

கடந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி கணிசமான அளவு மோசமடைந்துள்ளது என்று மாகாண அரசு தெரிவித்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2024ஆம் ஆண்டில் 0.3%ஆக இருக்கும் எனத் தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024ஆம் ஆண்டில் 1.2%ஆக இருக்கும் எனக் கூறப்பட்டிருந்தது.

ஒன்ராறியோ மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி தற்போது 2025ஆம் ஆண்டில் 1.9%ஆகவும், அதன்பின்னர் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு 2.2% ஆகவும் இருக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்தக் கணிப்புகளும் கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் கூறப்பட்ட கணிப்புகளைவிடக் குறைவானவையே.

நிதி அமைச்சகத்தின் கணிப்புகளின்படி பணவீக்கம் 2023ஆம் ஆண்டில் 3.8% ஆக இருந்தது. இது 2024ஆம் ஆண்டில் 2.6%ஆகக் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது. அதன்பின்னர், 2025ஆம் ஆண்டில் கனடிய வங்கியின் இலக்கான 2%இற்கு பணவீக்கம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நிதி அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு மேலும் தெரிவிக்கையில், “பொருளாதார விடயங்களில் உலகளாவிய சக்திகளின் தாக்கத்தில் இருந்து நாங்கள் விடுபட வில்லை. அதனால், எங்கள் வருவாய் குறைந்துள்ளது. அத்துடன் அரசாங்கத் தின் செலவுகள் அதிகரித்துள்ளன.

நாங்கள் தற்போதைய நிலையில் தடுப்புப் போட்டு நிற்கலாம் அல்லது தொடர்ந்தும் உட்கட்டமைப்பிற்கான முதலீடுகளைச் செய்யலாம். பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கலாம் மற்றும் தொழிலாளர்களை ஆதரிக்கலாம். நாங்கள் இரண்டாவதையே தெரிவு செய்தோம்” என்றார்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சமூகப் பராமரிப்புத்துறைக்கு அடுத்த மூன்று

தொடர்ச்சி 05 பக்கம்

















LILY
ASPENRIDGE
A New Project
Competitive Pricing.
Exclusive offer for brokers — seize the opportunity now!
Limited Time Incentives
No Interim Occupancy
Only Final Closing
Only 5% Down per year
5% in 2nd years
5% in 3rd years
Free Assignments*
Capped Development Charges $ 0
FINAL CLOSING : SUMMER 2024
HOMELIFE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
Tel: 416-321-6969
* Independently owned and operated.


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# பிராமணர்களை இனப்படுகொலை செய்யச் சொன்னாரா பெரியார்?

**கண்ணன்**

சென்னை சங்கீத வித்வத் சபையின் சங்கீத கலாநிதி விருது இந்த ஆண்டு கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை சர்ச்சையாகியுள்ளது. டி.எம். கிருஷ்ணாவுக்கு விருது கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள கர்நாடக இசை இரட்டையர்களான ரஞ்சனி - காயத்ரி சகோதரிகள், இது தொடர்பாக சங்கீத வித்வத் சபை (மியூசிக் அகாடமி) தலைவர் முரளிக்கு எழுதிய இரண்டு கடிதங்களில், “பிராமணர்களை இனப்படுகொலை செய்யச் சொன்னவர் பெரியார்” என்று குறிப்பிட்டுள்ளனர். இதுவும் சர்ச்சையாகியுள்ளது. உண்மையில் பெரியார் அப்படிச் சொன்னாரா?

ரஞ்சனி - காயத்ரி சகோதரிகள் எழுதியுள்ள முதல் கடிதத்தில், “பிராமணர்கள் இனப்படுகொலையை வெளிப்படையாக ஆதரித்த, பிராமண சமூகத்தின் ஒவ்வொரு பெண்ணையும் பலமுறை கேவலமான தகாத வார்த்தைகளால் அழைத்து துஷ்பிரயோகம் செய்த, சொற்பொழிவுகளில் இழிமொழியை இடைவிடாமல் பாடுபட்ட ஈவெரா போன்ற ஒரு நபரை டி.எம். கிருஷ்ணா புகழ்வதை கவனிக்காமல் இருப்பது ஆபத்தானது” என்று குறிப்பிடுகின்றனர்.

இரண்டாவது கடிதத்தில், “இனப்படுகொலை வெறியர்களுக்கும் நியாயமான சொற்பொழிவுகளுக்கும் மறைமுக மன்னிப்புக் கேட்பவர்களாக இருக்க மறுத்துவிட்டோமா? ஆம்” எனக் குறிப்பிட்டுள்ளனர்.

முதல் கடிதத்தில் ஈவெரா என்று குறிப்பிட்டு எழுதிய ரஞ்சனி - காயத்ரி சகோதரிகள் இரண்டாவது கடிதத்தில் பெரியார் பெயரைக் குறிப்பிடவில்லை என்றாலும், ‘இனப்படுகொலை வெறியர்கள்’ என்று அவரையே சுட்டுகின்றனர். இதற்கு பெரியாரிஸ்ட்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள மூத்த பத்திரிகையாளர் சாவித்திரி கண்ணன், “டி.எம். கிருஷ்ணாவிற்கு விருது வழங்கப்படுவதை சாக்காக வைத்து பெரியார் பெரிய அளவில் தாக்கப்பட்டு வருகிறார்! பெரியார் இனப்படுகொலை செய்யத் தூண்டியதாக அபாண்ட பழி சுமத்துகின்றனர். மீண்டும், மீண்டும் இந்தப் பழியை ரஞ்சனி, காயத்ரி, துஷ்யந்த் ஸ்ரீதர், விசாகா ஹரி, திருச்சூர் சகோதரர்கள் மட்டுமல்ல, பாஜகவின் அண்ணாமலை, உமா ஆனந்த் உள்ளிட்ட பலர் பெரியாரை இழிவுபடுத்தும் வாய்ப்பாக இந்தச் சந்தர்ப்பத்தை மாற்றுகிறார்கள்! ஆனால், பெரியார் அப்படிப்பட்டவரல்ல, இவர்கள் புரிதலே தவறு” என்கிறார்.

பெரியாரியவாதியும் ‘கறுப்புப் பிரதிகள்’ பதிப்பக உரிமையாளருமான நீலகண்டன், “பிராமணர்களைப் படுகொலை செய்ய நினைத்தவர் பெரியார் எனக் கூறியுள்ள இருவர் மீதும் பெரியார் எங்கு அப்படி சொல்லியுள்ளார் என ஆதாரம் கேட்டு திராவிடர் கழகம் வழக்குத் தொடர வேண்டும்” எனக் கூறியுள்ளார்.

எழுத்தாளரும் ஜெயகாந்தன் மகளுமான தீபலஷ்மி, “பெரியார் காலம் தொட்டு இதுவரைக்கும் இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் கிடையாது. கேட்டாலும் தர மாட்டார்கள். ஆனால், வதந்தியை வாந்தி எடுத்துக்கொண்டே இருப்பார்கள்” என்கிறார் காட்டமாக.

### பெரியார் எங்கேயும் அப்படி சொல்லவில்லை என்றால் இந்தப் புகார் எப்படிப் புறப்பட்டது?

இது தொடர்பாகக் கூறும், ‘பெரியார் பிராமணர்களின் எதிரியா?’ நூலின் ஆசிரியர் சோழ. நாகராஜன், “அது காந்தியார் படுகொலை செய்யப்பட்டிருந்த சமயம். தமிழ்நாட்டில் திருவாரூர் பக்கம், நன்னிலத்தை அடுத்த சன்னா நல்லூரில் திராவிடர் கழகம் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வழக்கம்போல பிராமணியத்துக்கு எதிராகப் பேசிக் கொண்டிருந்த ஓர் இளம் பேச்சாளர், காந்தி படுகொலைச் சம்பவத்தைத் தொடுகிறார். கோட்ஸே ஒரு பிராமணர் என்பதை அம்பலப்படுத்தும் அவர், தமிழ்நாட்டு பிராமணர்களை விமரிசிக்கத் தொடங்குகிறார்.

உடனே மேடையில் அமர்ந்திருந்த பெரியார் பலகைகொண்டு அமைக்கப்பட்டிருந்த மேடையின் தரையைத் தன் கைத்தடியால் தட்டி ஒலியெழுப்புகிறார். பெரியார் இப்படித் தடியைக்கொண்டு தட்டினால் அது ஓர் எச்சரிக்கை சமிக்ஞை. அதற்கான பொருள் கழகத்தினருக்குத்தான் தெரியும். ‘இந்தப் பேச்சு தவிர்க்கப்பட வேண்டியது, முடித்துக் கொள்!’ - என்பதே அதன் அர்த்தம்.

தொடர்ந்து பேச்சாளரிடம் பேசிய பெரியார், “நமக்கு பார்ப்பனியத்தோடுதான் முரண். தனிப்பட்ட பார்ப்பனர்களோடல்ல. தவிரவும், நாடு இப்போது இருக்கிற நிலையில் இப்படிப் பேசலாமா? மக்கள் ஏற்கனவே கொந்தளிப்பில் இருக்கிறபோது அதைத் தூண்டிவிடுற மாதிரிப் பேசுவது கலவரங்களை உண்டாக்காதா? சமூகத்தைப் பிளவுபடுத்துவதா நம் நோக்கம்?” என்று கூறியதாக அந்தப் பேச்சாளர் பதிவு செய்துள்ளார்.

தொடர்ந்து 7.2.1948 அன்று ‘குடிஅரசு’ ஏட்டில் இது தொடர்பாக எழுதிய பெரியார், “காந்தியாரின் இடத்தை நிறைவு செய்பவர் இந்நாட்டில் எவருமே இல்லை. மக்கள் தங்களது அரசியல், மத வேறுபாடுகளைக் கடந்து சகோதர பாவத்துடன் நடந்துகொள்வதே நாம் காந்தியாருக்குச் செய்யும் மரியாதையாகும். தென்னாட்டு



திராவிடர்கள் இயல்பாகவே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ வைப்பர்” என்று குறிப்பிட்டார்.

அச்சமயம் சமூக ஒற்றுமையை வலியுறுத்தி அகில இந்திய வானொலியில் அவர் உரையாற்றியதும் குறிப்பிடத்தக்கது” என்கிறார் சோழ. நாகராஜன்.

22.2.1948 அன்றைய ‘விடுதலை’ நாளேட்டில் இதுபற்றி விரிவாக எழுதினார் பெரியார். அதில், “பார்ப்பான் ஒருவன் சுட்டான் என்ற காரணத்திற்காக அந்தப் பார்ப்பனரைத் திட்டிவிடுவதாலோ அல்லது அந்தப் பார்ப்பன சமூகத்தையே அழித்துவிடுவதாலோ எத்தகைய உருப்படியான பலனும் ஏற்பட்டுவிடாது.

நான் கூறுகிறேன், சுட்டது பார்ப்பான் அல்ல, சுட்டது கைத்துப்பாக்கி. அந்த பார்ப்பான் மீது கோபித்துக் கொள்வதாயிருந்தால், அந்த அளவுக்கேனும் அந்தப் பார்ப்பானின் கைக்கருவியாக இருந்த அந்தத் துப்பாக்கியின்மீது நாம் கோபித்துக் கொண்டாக வேண்டும் அதை முதலில் துண்டு துண்டாய் உடைத்துத் தூள்தூளாக்க வேண்டும்.

காந்தியாரைச் சுட்டுக்கொல்ல உதவியாயிருந்த துப்பாக்கியின்மீது நாம் எவ்வளவு கோபப்படலாமோ, எவ்வளவு பழிக்கலாமோ அந்த அளவுக்குத்தான் அதை உபயோகப்படுத்திய பார்ப்பான் மீதும் நாம் கோபித்துக்கொள்ள முடியும், பழிக்க முடியும். அவனைப் பழிப்பதாயிருந்தால் அதே அளவுக்கேனும் அவன் பின்னாடி இருந்துகொண்டு, அவனுக்கு ஆதரவாய் இருந்த மற்றவர்களையும் பழிக்க நாம் சித்தமாயிருக்க வேண்டும்.

அவனும் அந்தத் துப்பாக்கிபோல், அவர்களுக்கு ஒரு கருவியாக அமைந்துவிட்டான். மதத்தின் பேரால் உள்ள மூடநம்பிக்கைக் கருத்துகளும் சாதியின் பேரால் உள்ள ஆசார அனுஷ்டானங்களும் மற்றும் கடவுள் சாஸ்திரம் இவற்றின் பேரால் உள்ள அறியாமையுந்தான் இம்மாதிரிக் காரியத்தைச் செய்யும்படி அவனைச் செய்துவிட்டன. இனியேனும் இப்படிப்பட்ட காரியம் நடவாமல் இருக்க வேண்டும்.

அவனைத் தூக்கில் போட்டுவிடுவதாலோ அல்லது அவன் சேர்ந்திருந்த ஸ்தாபனத்தைக் கலைத்துவிடுவதாலோ அல்லது அவனுக்கு ஆதரவாயிருந்த அத்தனை பேரையும் அழித்துவிடுவதாலோ இப்படிப்பட்ட காரியம் நின்றுவிடாது. இவை வெறும் தற்காலிக சாந்தியாகத்தான் இருக்க முடியும். இது ஒருபோதும் நிரந்தரமான சாந்தியாகிவிடாது.

இப்படிப்பட்ட கொலைகாரர்கள் தோன்ற எது ஆதாரமாயிருந்ததோ அதை அழித்து ஒழிக்க வேண்டும். ஒரு சமுதாயத்தையோ அல்லது ஒரு கூட்டத்தையோ அல்லது ஒரு சாதியையோ அப்படியே அழித்துவிடுவதால் இக்கொடுமை மறைந்துபோகாது.

காந்தியாரைக் கொன்றது ஒரு பார்ப்பான் என்று கூறப்படுகிறது. சித்தானந்தரைக் கொன்றது ஒரு முஸ்லிம் என்று கருதப்படுகிறது. இந்தப் பார்ப்பானோ அல்லது அந்த முஸ்லிமோ தனியாகத் தோன்றி இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துவிட்டதாக நாம் கூறிவிட முடியாது. இம்மாதிரிச் சம்பவங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன என்பதற்குச் சரித்திர ஆதாரங்களே இன்றும் இருந்துவருகின்றன.

மதுரை மாநகரில் 8,000 சமணர்கள் சைவத்தை எதிர்த்ததற்காகக் கழுவேற்றப்பட்டார்கள். அவர்களைக் கழுவேற்றியவன் பார்ப்பான் அல்லன். முஸ்லிமும் அல்லன். பின் யார்? அன்றைய மதக் கருத்துப்படி அரசன் அவர்களைக் கழுவேற்ற ஆணையிட்டான். ஆகவே, அவனல்லன் கழுவேற்றியது. அவன் தழுவியிருந்த மதம்தான் அவர்களைக் கழுவேற்றும்படி அவனைத் தூண்டியது.

நமது சமுதாயம் இனிமேலும் சாந்தியோடு வாழ வேண்டுமானால், மதம் அற்ற ஒரு புது உலகத்தை நாம் சிருஷ்டிக்க வேண்டும். திராவிடர் கழகம் கலகத்திற்கோ, கொள்ளைக்கோ, பலாத்காரத்திற்கோ இருந்துவரவில்லை.

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM

34ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave. E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# சமூகப்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆண்டுகளில் $2 பில்லியன் முதலிடப்படுகிறது. இச்சேவை வீட்டில் அல்லது சமூக அமைப்பில் தாதிமார்களால் அல்லது தனிப்பட்ட ஆதரவுப் பணியாளர்களால் வழங்கப்படும். இந்த நிதியின் மூலம் தாதிமார்கள், தனிப்பட்ட ஆதரவுப் பணியாட்கள் மற்றும் முன்னணி பராமரிப்பு வழங்குநர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும். இதனால் அவர்களது சேவைகள் விரிவாக்கப்பட்டு ஒரு நிலையானதாக மாற்றப்படும்.

அத்துடன் சுகாதாரச் செலவினங்களுக்கு அரசு முதலிடும் பணம் 2024-2025ஆம் நிதியாண்டில் $85 பில்லியனாகவும், 2026-2027ஆம் நிதியாண்டில் $89.9 பில்லியனாகவும் இருக்கும்.


யோர்க் பல்கலைக்கழக (York University) நிர்வாகத்தின் கீழ் ஒன்ராறியோவில் உள்ள வோண் (Vaughan) நகரில் ஒரு மருத்துவப் பல்கலைக்கழக வளாகம் அமைப்பதற்காக நிதி இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வளாகத்தில் குடும்ப மருத்துவத்திற்கான துறை அமைக்கப்படும். கனடாவில் குடும்ப மருத்துவர்களுக்காகப் பயிற்சியளிக்கப்படும் முதலாவது மருத்துவ பல்கலைக்கழக வளாகமாக இது இருக்கும்.

ஒன்ராறியோ மருத்துவ சங்கத்தின் கணிப்பீட்டின்படி 2.3 மில்லியன் ஒன்ராறியோ மக்கள் குடும்ப மருத்துவர் இல்லாமல் இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை இன்னும் இரண்டு ஆண்டுகளில் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என அவர்களது கணிப்பீடு கூறுகிறது. இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒன்ராறியோ மாகாணத்தில் 2,500இற்கு மேற்பட்ட குடும்ப மருத்துவர்கள் தேவை எனக் கணிப்பிடப்பட்டது.

தாதிகளின் பற்றாக்குறை ஒன்ராறியோ மாகாணத்தில் இருப்பதால், பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் மேலதிகமானோரை இத்துறையில் சேர்ப்பதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு $128 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 2,000 மேலதிக மாணவர்கள் இத்துறையில் அனுமதி பெறுவர். அத்துடன் 1,000 மேலதிக பதிவு செய்யப்பட்ட தாதிமாருக்கு தொழில் வழங்கவும் இந்த நிதி பாவிக்கப்படும்.

பொழுதுபோக்கு மற்றும் சமூக வசதிகளுக்குப் பயன்பெறும் வகையில் விளையாட்டுத்துறைக்கு $200 மில்லியன் இவ்வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குத் துறைகளில் உட்கட்டமைப்புக்களை அமைக்க இம்முதலீடு உதவும்.

ஒன்ராறியோவிற்கான பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்குகள் பற்றி ஆய்வு செய்யும் ஓர் இலாப நோக்கற்ற நிறுவனம் மாகாண அரசுக்கு விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குத்துறைக்கான உட்கட்டமைப்புகளின் பற்றாக்குறை 2021ஆம் ஆண்டில் $9.5 பில்லியனாக இருந்தது எனப் பரிந்துரை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.



GTA பகுதியில் நகர்காவலர் வானூர்தி மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நான்கு உலங்கு வானூர்திகளை வாங்க இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு $46 மில்லியனை அரசு முதலிடுகிறது.

ஒன்ராறியோ மாகாணத்தில் காவல்துறையினரின் வாகனத் திருட்டை கண்காணிக்கும் குழுவிற்கும், வாகனம் திருடுவோரை கைது செய்து வழக்கு நடத்தும் குழுவினருக்கும் பயிற்சி அளிக்கவும், மேலதிகமாகப் பணியாட்களை அமர்த்த வும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு $49 மில்லியன் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாண காவல்துறையின் துணை ஆணையாளர் Marty Kearns கடந்த ஏழு கிழமைகளில் ஒன்ராறியோ மாகாணத்தில் 3,000 வாகனங்கள் களவாடப்பட்டுள்ளன எனத் தெரிவித்திருந்தார். இது ஒன்ராறியோ மாகாணத்தில் என்றும் இல்லாதவாறு அதிக எண்ணிக்கை என்று அவர் கூறியிருந்தார்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மாகாண அரசு ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள எல்லா உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உரிமையாளர்கள் இருக்காமல், வாடகைக்கும் கொடுக்காமல் வைத்திருக்கப்படும் வீடுகளுக்கு வரி விதிக்கும் உரிமையை வழங்குகிறது. இதன்மூலம் வாடகைக் குடியிருப்பாளர்களுக்குத் தேவைப்படும் வீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என அரசு எண்ணுகிறது. இதுவரை இவ்வாறு வெறுமையாக உள்ள வீடுகளுக்கு வரி விதிக்கும் அதிகாரத்தை ரொறொன்ரோ, ஒட்டாவா மற்றும் ஹமில்ட்ரன் நகரசபைகளுக்கு மட்டுமே மாகாண அரசு வழங்கியிருந்தது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மாகாண அரசின் மதியிறுக்கம் (Autism) திட்டத்திற்கு மாகாண அரசு வழங்கும் நிதியுதவி $120 மில்லியனாக அதிகரிக்கப்பட உள்ளது. இது முன்னர் வழங்கப்பட்ட நிதியுதவியின் இரண்டு மடங்காகும். இதன்மூலம் மேலதிகமாக 20,000 பிள்ளைகள் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண அரசு மனநலம் மற்றும் போதைக்கு அடிமையாதலை தவிர்க்கும் செயல்திட்டங்களுக்கு உதவ அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் $396 மில்லியன் முதலிடப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மக்களின் அதிகரித்த செலவினங்களைக் குறைக்கும் முகமாக வாகன எரிபொருளுக்கு விதிக்கப்பட்ட வரிக்குறைப்பு இந்த ஆண்டு இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இது முன்னர் ஜூன் 30, 2024ஆம் திகதியுடன் நிறைவு பெறுவதாக இருந்தது. இவ்வரிக்குறைப்பு மூலம் குடும்பம் ஒன்று ஆண்டுக்கு $320 சேமிக்கிறது என அரசு மதிப்பிட்டுள்ளது.



Leader of the Official Opposition – Marit Stiles

மாகாணத்தின் வீட்டுத்திட்டங்களை ஆதரிக்க மாகாண அரசு இரண்டு நிதித் திட்டங்களில் $1.8 பில்லியனை முதலீடு செய்கிறது. இதன்மூலம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வீடுகள் கட்டுவதை ஊக்குவிக்கும் முகமாக அவற்றிற்குத் தேவையான வீதி, பாலங்கள், குடிநீர், கழிவுநீர், மழைநீர் போன்றவற்றிற்கான உட் கட்டமைப்புக்களை அமைக்க இந்நிதி பயன்படுத்தப்படும்.


மொத்தமாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அரசு $214.5 பில்லியன் முதலீடுகளைச் செய்துள்ளது. இந்த நிதியாண்டிற்கான வருமானமாக $204.7 பில்லியனை அரசு எதிர்பார்க்கிறது.

இந்த வரவு-செலவுத் திட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த ஒன்ராறியோ புதிய ஜனநாயகக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான Marit Stiles, "இந்த வரவு-செலவுத் திட்டம் ஒன்ராறியோவில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் அவதிப்படும், குடும்ப மருத்துவர் இல்லாமல் அல்லல்படும் மற்றும் உடல் நலம் பாதிப்புக்கு உதவி பெறமுடியாமல் சிரமப்படும் ஒன்ராறியோ மக்களுக்கு எந்தவித நிவாரணத்தையும் வழங்க வில்லை. இவ்வரவு-செலவுத்திட்டம் ஒன்ராறியோவின் பழமைவாதக்கட்சி மக்களுடன் தொடர்பில் இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது" என்றார்.

ஒன்ராறியோ லிபரல் கட்சியின் தலைவர் ஃபொனி குறம்பி (Bonnie Crombie) இந்த வரவு-செலவுத் திட்டம் பற்றிக் கூறுகையில், "பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் ஒன்ராறியோ மக்களுக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எந்த நிவாரணமும் இல்லை" என்றார்.




# உலக பிள்ளைகள் நூல்தினம்




சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

நூல்களைப் படிக்கும் விருப்பத்தை ஊக்குவித்தல், குழந்தைகளுக்கான நூல்களின்மீது கவனத்தை ஈர்த்தல் என்பன இத்தினத்தின் நோக்கமாகக் கொண்டுள்ளபோதிலும் புத்தகம் என்பது பாடசாலைக்குப் பொதி சுமப்பதைப்போல பிஞ்சுகள் எடுத்துச் செல்லும் புத்தகங்கள் மட்டுமல்ல பாடத்திட்டத்தினைத் தாண்டி ஏராளமான விடயங்களை மொட்டுக்கள் கற்றுக்கொள்ளவேண்டும். சின்ன வயதிலேயே நூல்களைப் படிக்கும் ஆர்வத்தினை ஏற்படுத்தினால் குழந்தைகள் வளர, வளர ஆர்வத்துடனும் வேகத்துடனும் நூல்களைப் படிப்பர். உங்களைச் சுற்றியிருக்கும் குழந்தைகளுக்கு உங்களால் முடிந்த நூல் ஒன்றினைப் பரிசாக வழங்குங்கள். நூல்களின் பயன்களை ஊர் அறியும். அறிந்தும் செயற்படுத்த முடியாமல் இருப்பது மாபெரும் தவறு. பிள்ளைகளின் நூல் வாசிப்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த குழந்தை எழுத்தாளர் ஹான்ஸ்கிருஸ்டியன் ஆண்டர்சன் பிறந்த நாளான ஏப்ரல் இரண்டாம் திகதி சர்வதேச பிள்ளைகள் நூல்தினம் 1967ஆம் ஆண்டுமுதல் கொண்டாடப்படுகின்றது.

சின்ன வயதிலேயே படிக்கும் ஆர்வத்தினை ஏற்படுத்தினால் குழந்தைகள் வளர, வளர ஆர்வ அதிகரிப்பால் அவர்களைப் புத்தகப் புழுவாக மாற்றி விடக்கூடாது. பெரியவர்களின் புத்தக வாசிப்பே குறைந்துவிட்ட இந்தக் காலத்தில் குழந்தைகள் புத்தகதினம் கொண்டாடப்படுவது விநோதமாகிவிட்டது. “ஒரு நல்ல புத்தகம் நூறு நண்பர்களுக்கு சமம்” என்கிறார் அப்துல்கலாம். புத்தகங்களை மேலிருந்து கீழ் நோக்கி வாசிக்க வாசிக்க அவரின் வாழ்க்கை கீழிருந்து மேல் நோக்கி உயரும். வாசிக்க, வாசிக்க நூல்களின்மீதான அன்பு வளர்வதுடன் நூல்களை நேசிக்கவும் தூண்டும்.

“உங்களிடம் அறிவொளி இருந்தால் அந்தந்த தீபத்திலிருந்து மற்றவர்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றிக்கொள்ளட்டும்” என்கிறார் கால்மார்க்ஸ். நூல்களைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தால் அது வெறும் காகிதம், தொடர்ந்து படித்தால் அதுவே வெற்றியின் ஆயுதம். “ஒரு கோடி பணம் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது ஒரு நூலகம் கட்டுவேன் என்று பதில் அளித்தாராம்” மகாத்மா காந்தி. “ஒரு நூலகம் திறக்கப் படும் ஊரில் ஒரு சிறைச்சாலை மூடப்படும்” என்கிறார் விவேகானந்தர். “தலை குனிந்து என்னைப் பார் தலை நிமிர்ந்து உன்னை நடக்கவைக்கிறேன்” இப்படிக்கு புத்தகம். நூலகத்தின் முக்கியத்தை உணர்ந்த பின்னராவது பிள்ளைகள் நூலகம் செல்வது சாலச்சிறந்தது.




April 02, 2024

நூல்களைச் சேமித்துப் பயனில்லை, நூல்களில் உள்ளவை புத்தியில் சேமிக்கப் படவேண்டும். வாசிப்பால் அழகாகிறது நம் வாழ்வு. நூல்கள் சிறந்த ஆசிரியர். நூல்கள் சிறந்த பாடசாலை. நூல்கள் சிறந்த வழிகாட்டி. குழந்தைகளுக்கு நூல்கள் சுமையல்ல. சுவையான சுகம் என்பதை உணர வைக்கவேண்டும். நூல்கள் வாசிப்பது என்பது வெறும் பாடப்புத்தகங்கள் மட்டுமன்றி அறிவுக்கு, பொழுதுபோக்கிற்கான வாசிப்பையும் குறிக்கிறது. இன்று நூல்களுக்கும், பிள்ளைகளுக்குமான இடைவெளி நீண்டு காணப்படுகிறது. ஒரு விடயம் பிடித்து விட்டால் அதைத் தேடிச்செல்கிறோம். இன்றைய நிலைமை பிள்ளைகள் நூல்களை தேடிச்செல்வது குறைவாகவே உள்ளது. வாசகர்களான பிள்ளைகள் தமக்குத் தேவையானவற்றை வேறு ஒரு மூலத்திலிருந்து பெற்றுக்கொள்கிறார்கள் என்றும் எண்ணவேண்டி உள்ளது.

பிள்ளைகள் நூல்களுடன் பழகுவதை அதிகரிக்க வேண்டும். இன்று எமது சமூகத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் அல்லது மாற்றங்கள் என்பது ஏற்கனவே உலகின் வேறுபல இடங்களில் எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகள்தான். குறிப்பாக தொலைக்காட்சியின் பாவனை, கைபேசிகளின் உக்கிரமான பாவனையும் அதனால் பிள்ளைகளின் போக்கில் ஏற்பட்ட மாற்றமும் மேற்கு நாடுகளில் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகளில் ஒன்றாகும். பிள்ளைகளின் நடத்தைகள் அவர்களின் இயல்புகளை ஆராய்ந்து அதற்கு ஏற்றாற்போல் பிள்ளைகளுக்கான நூல்களை வெளியீடு செய்யவேண்டும். பிள்ளைகளின் சிந்தனை, மனப்பாங்கு விருத்தி, தொடர்ந்து சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கு ஏற்றவகையில் நூல்களை ஆக்குதல் மற்றும் வெளியீடுகளை ஆக்குதல் வேண்டும். புதிய சிந்தனைகள் மற்றும் வாசிப்பதற்கு ஆர்வத்தை தூண்டும்வாயிலான பொழுதுபோக்குக் கதைகள் குறைவாக உள்ளது. இவை நிவர்த்தி செய்யப்படுமிடத்து பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கம் அதிகரிக்க ஏதுவாகும்.

தொலைநோக்குள்ள எண்ணங்களை தோற்றுவிக்கும் வகையில் நூல்கள் அமையவேண்டும். புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் சவால்களை எதிர்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளுக்கு புத்தாக்க சிந்தனைகளை வழங்கக்கூடிய நூல்களை பிள்ளைகளுக்காக வெளியிட வேண்டும். அவற்றை வாசிக்கத் தூண்டவேண்டும். தேவை அறிந்து காலத்தே செய்யும் செயற்பாடுகள் வளமான எதிர்காலத்தை பிள்ளைகளுக்கு உருவாக்கும். நூல்கள் பிள்ளைகளின் உள்ளத்தை பாதிப்பதாக அமையக்கூடாது. அதேவேளை நேர்மறையான சிந்தனைப்போக்கை ஏற்படுத்தக் கூடிய வகையில் இரசனையுடன் நூல்களின் முடிவு அமைதல் வேண்டும். அதேசமயம் நூல்களினூடாகப் பிள்ளைகள் குழாமுக்கு நன்மையை ஈட்டித் தர வேண்டும். பிள்ளைகளின் வயதுக் குழுவினருக்கு ஏற்ற சொற்தொகுதியைப் பயன் படுத்த வேண்டும். மொழியைச் சிக்கலின்றி பயன்படுத்த வேண்டும். சிறு வசனங்களாக அமைதல் வேண்டும். இலகுவான மொழிநடை வேண்டும். பாவிக்கப்படுகின்ற சொற்தொகுதி பிள்ளைகளின் சொற்களஞ்சியத்தை மேம்படுத்தவும், கற்பனா சக்தியை வளப்படுத்தவும் நூல்கள் பங்களிப்பு செய்தல் வேண்டும்.

வயதுப் பிரிவினருக்கு ஏற்றவகையில் பேச்சுவழக்கு மொழியை உபயோகிப்பது சிறப்பு. எழுத்துப் பிழைகளின்றி தெளிவான வசனங்கள் காணப்பட வேண்டும். சொற்கள் பிரித்து எழுதப்படும் போது அவை சீராக அமையவேண்டும். பிள்ளைகளின் கதைகளுக்கான நூல்களாயின் ஓவியங்கள் முக்கிய இடத்தை வகிக்கவேண்டும். கதையின் உள்ளடக்கத்திற்கு கிடைக்கப்படுகின்ற அதே பெறுமதி வரைபடங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். உருவங்கள் மற்றும் ஓவியங்கள் கதையை சிறப்பாக கிரகித்துக் கொள்வதற்கு ஏற்றவாறு ஆக்கப்பட வேண்டும். பிள்ளைகளின் உள்ளத்தில் நிறங்கள் அதிக கவர்ச்சியை ஏற்படுத்தும் என்பதால் இருண்ட நிறங்களைப் பாவிப்பதை தவிர்த்தால் நல்லது. பிள்ளைகளினது நூல் ஒன்றில் உருவப்படமானது விளக்கமாக இருப்பதால் பிள்ளைகளுக்கு பரந்த ஓர் உலகம் திறந்துவிடப்படுவதுடன் அது அதிகம் வெற்றியளிக்கிறது. எழுத்துக்கள் உயிர்பெற்று வாழ்வது வாசிப்பவரும் நேசிப்பவரும் உள்ளவரையே.

பிள்ளைகள் தொடர்ச்சியாகப் பாடப் புத்தகங்களை பயன்படுத்த விரும்ப மாட்டார்கள். அதைவிடுத்து பிள்ளைகளுக்கான கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், கவிதைகள், வீரதீரச் செயல்கள், வரலாறுகள், சமயம் சார்ந்த நூல்கள், பொது அறிவு நூல்கள் போன்ற வெவ்வேறான

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)




TITLE SPONSOR
KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS' ASSOCIATION CANADA
ESTD 1994
KOKUVIL HINDU COLLEGE O.S.A. CANADA
மாபெரும் இன்னிசை நடன நிகழ்ச்சியும்,
இராப்போசன விருந்தும்
மகுடம்
MAHUDAM 2024
APRIL
6
2024
5:00 PM
Metropolitan Centre - Banquet Hall in Scarborough.
3840 Finch Ave E, Toronto, ON M1T 3T4
பறை, நடனம்,
நாட்டிய நாடகம்,
கவியரங்கம்,
இசைநிகழ்ச்சி
SINGERS
Magisha Bahirathan, Sabaesh Kumar, Sharmila Ganesh, Ananthan K, Prabha Balakrishnan,
MEGA TUNERS BAND
DANCE PERFORMER'S
ABINAYALAYA NATYALAYAM & SRI ABIRAMY DANCE ACADEMY
Mega Tuners
MC
Ramprasan
&
Sai Janani
Ravi Kana - 416 725 7284
Kumaresh - 416 786 5054
Tharani - 647 629 8420
Adults Ticket $75
Children $40
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
SINDI FINANCIAL
Reliable
HOMELIFE
TEMPLE OF SAREES
OPTIMART
FIRSTOPTICAL
Eye Exams
Safety Eye wears
Contact Lenses
Designer Eye glasses
CALL FOR AN APPOINTMENT
416-282-2129
Brooklin Pub & Lounge
RE/MAX
HIDE AUTO CENTRE
JAPANESE CAR SPECIALIST
416-288-0711
WINNERS LOTTO CENTRE
PROACTIVE DRIVERS
A1 Bakery Inc
905.844.7485
416 301 1733
416 215 9297

# நாமும் நமது இல்லமும் 651

# ஆதனத்திருட்டு




பல ஆண்டுகளிற்கு முன்பாகத் தமது அடமானக்கடன் அடைக்கப்பட்டுவிட்டது. இனி மகிழ்ச்சியான காலம். இதுவே கனடியர்களின் கனவு. இதுவும் நிறைவேறி விட்டது. குறிப்பிட்ட நிதி நிறுவனம் வாழ்த்துச்செய்தியும் அனுப்பியிருந்தது. ஆனால், நடந்தது என்ன?

புதிய கடிதம், அந்த ஆதன உரிமையாளர்களிற்கு வந்தது. நீங்கள், அடமானக்கடன் முறையாகச் செலுத்தவில்லை. இதனால் உங்கள் ஆதனத்தை எங்களால் விற்பனைக்காகச் சந்தைப்படுத்தப்படும் என்று வேறு ஒரு நிதி நிறுவனம் மிரட்டல் கடிதம் அனுப்பியிருக்கின்றது. குறிப்பிட்ட ஆதன உரிமையாளர் இதற்கு முன்பு குறிப்பிட்ட கடிதம் அனுப்பியிருந்த நிதி நிறுவனத்துடன் எதுவித தொடர்பும் இருக்கவில்லை. அந்த ஆதன உரிமையாளரின் மனநிலை எவ்வாறு இருக்கும்?

இது ஆதனத்திருட்டு (Title Fraud) என்று அழைக்கப்படுகின்றது. இவ்வாறான திருட்டு அண்மைக்காலத்தில் கனடாவில் அதிகரித்து வருகின்றது.

இதில் இரு விடயங்கள் இப்பொழுது நடைபெறுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

1. ஆதனத்தின் உரிமையாளரின் பெயரை மாற்றி ஆதனத்தை வேறு ஒருவர் விற்பனை செய்வது.

2. அடமானக்கடன் இல்லாத ஆதனங்களைக்கண்டு அதன்மீது புதிய அடமானக் கடன் பெறுதல். பிற்பாடு அடமானக்கடன் பெற்றபின்பு, அடமானக்கடன் செலுத்துவதில்லை. இதனால், உண்மையான ஆதன உரிமையாளர் பெற்ற முழுக்கடனிற்கும் பொறுப்பாளராகின்றார். உரிமையாளருக்குத் தெரியாமல் அடமானக்கடன் பெறுவதற்கு, திருட்டுத்தனமாக உரிமையாளர்களின் பெயரில் தேவையான, முக்கியமான பல பத்திரங்கள் உருவாக்கப்படுகின்றன. இதனை குறிப்பிட்ட நிதி நிறுவனம் நம்பினால், அடமானக்கடன் கொடுக்கப்பட்டுவிடும்.

இன்றைய காலத்தில் திருட்டுத்தனமாக ஆதாரங்கள் இலகுவாக உருவாக்கப்பட்டுவிடுகின்றன என்று தெரியவருகின்றது.

குறிப்பாக இவ்வாறான திருட்டு செய்வோர் ஆதனக்கடன் முற்றாகச் செலுத்தப்பட்டுள்ள ஆதனங்களையே தமது குறிக்கோளாகக் கொள்கின்றனர்.

இதற்காகவே இன்றைய காலத்தில் ஆதனம் பெறும்போது Title Insurance (ஆதன உரிமை காப்புறுதி) தேவை என்பதனை நிதி நிறுவனங்கள் மிகவும் இறுக்கமாக வைத்துள்ளன.

இவ்வாறான (Title Insurance) காப்புறுதி இருக்கும் சந்தர்ப்பத்தில் திருட்டுத்தனமாக தில்லுமுல்லுகள் நடத்தப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்த, இக்காப்புறுதி நிறுவனம் முற்றாக செயல்படும். இதனால், ஆதனம் வாங்கும்போதே இந்தக் காப்புறுதி எடுப்பதால் இவ்வாறான நிலைமைகள் இலகுவாகத் தீர்க்கப்பட்டு விடும். உரிமையாளரின் மன உளைச்சல் நீங்கிவிடும்.

பொதுவாக ஒரு (1) மில்லியன் பெறுமதியான ஆதனத்திற்கு இவ்வகையான காப்புறுதி (Title Insurance) ஏறக்குறைய $900 தேவைப்படும்.

அண்மைக்காலமாக இவ்வகைத் திருட்டு அதிகரித்து வருவதாகத் தெரிய வருகின்றது. இதற்கு இன்றைய காலத்தில் அநேகமாக விற்றல், வாங்கல்கள், ஒப்பமிடுதல் போன்றவை Onlineஇல் செய்வதால் இலகுவாக மோசடிகள் அரங்கேற்றப்



படுகின்றன. அத்துடன் வயதானவர்களின் ஆதனங்கள் இலகுவாக தாக்கப்படுகின்றன.

இவர்களின் ஆதனங்கள் அடமானக் கடன்கள் முற்றாகக் கட்டப்பட்டு, ஆதனங்கள் அடமானக்கடன் இல்லாமல் (Mortgage Free) காணப்படுகின்றன. இவ்வாறான ஆதனங்கள் ஆதனத் திருட்டு செய்பவர்களின் கண்ணில் இலகுவாகச் சிக்குகின்றன.


இவ்வாறான திருட்டுத்தனமான வேலைகளைத் தடுப்பதற்கு ஒன்ராறியோ அரசுடன் தொடர்புடைய நிறுவனங்கள், அடமானக்கடன் பெற்றுக்கொடுக்கும் நிறுவனங்களிற்கும் பலவிதமான அறிவுறுத்தல்களைக் கொடுத்துள்ளது.

இவற்றை மீறுவோருக்குத் தகுந்த நடவடிக்க எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம் பல நன்மைகளை வழங்கி வருவது உண்மையாக இருந்தாலும், பல விதமான திருட்டு வேலைகளும் நடைபெறுகின்றது. இவ்வாறான நிலைமைகளைத் தடுப்பதற்கு புதிய தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்றன.

வெவ்வேறு புதிய தொழில்நுட்பங்கள், குறுகிய சிலகாலங்களில் வந்து கொண்டேயிருக்கின்றன. திருடர்களும் அதே வேகத்தில் புதிய புதிய உத்திகளைப் பாவித்து தமது கைவரிசைகளைக் காட்டிக்கொண்டே இருக்கின்றர். தகுந்த ஆலோசகர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுப்பது நல்லது.

எதற்கும் நாம் மிகவும் கவனமாகவும், திறம்படவும் செயல்படுவதன் மூலம் இவ்வாறான திருட்டு வேலைகளைக் குறைக்கலாம் என்பதே எனது கருத்து.




## பிராமணர்களை...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அதுவும் திராவிடர் கழகம் எனது கைக்கு வந்தது முதற்கொண்டு, அதில் நான் சேர்ந்து தொண்டாற்றிவந்த நாள் முதற் கொண்டு இந்நாள் வரைக்கும் அதை எந்தவிதமான பலாத்காரத்திற்கோ, பழி வாங்குவதற்கோ உபயோகப்படுத்தியவன் அல்லன். அத்தகைய செயலுக்கு அனுமதி கொடுத்தவனுமல்லன்.

திராவிடர் கழகத்தில் பலாத்காரத்திற்கு இடமில்லை. பலாத்கார உணர்ச்சி வேண்டுமென்று கருதிய சிலரையும்கூட திராவிடர் கழகத்தைவிட்டு நீக்கித் தண்டித்திருக்கிறோம். பலாத்காரத்திற்கு மட்டுமல்ல, நடத்தைக் குறைவுக்காகவும், ஒழுக்கக் குறைவுக்காகவும்கூடப் பலரைக் கழகத்தைவிட்டு வெளியேற்றியிருக்கிறோம். கழகத்தின் தலைவன் என்கிற முறையில் அதை மக்களின் அன்பிற்கும் நல்லெண்ணத்திற்கும் பாத்திரமான ஸ்தாபனமாக்கக் கவலையோடு நான் அதை நடத்திவருகிறேன்" என்று எழுதியுள்ளார் பெரியார்.

இதில் உள்ள, "அந்தப் பார்ப்பனரைத் திட்டி விடுவதாலோ அல்லது அந்தப் பார்ப்பன சமூகத்தையே அழித்து விடுவதாலோ எத்தகைய உருப்படியான பலனும் ஏற்பட்டுவிடாது" என்ற பெரியார் வார்த்தைகள்தான், பிராமண சமூகத்தையே இனப்படுகொலை செய்யச் சொன்னார் பெரியார் என திரிக்கப்பட்டு,



இவ்வளவு காலமும் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டு வருகிறது.

இப்போது இந்தியாவில் தேர்தல் நேரம் என்பதால், ஒரு சங்கீத சர்ச்சை இடையே, இந்த அரசியல் சர்ச்சையும் மீண்டும் உயிர்பெற்றிருக்கிறது.

புத்தாண்டில் புதுமைகள் தொடரட்டும்
மாற்றங்கள் மலரட்டும் ...
இன்னிசை முழங்கட்டும் எல்லோர்
வாழ்விலும் மகிழ்ச்சி நிலைக்கட்டும்
இனிய சித்திரை திருநாள்
நல்வாழ்த்துகள்!



# மின்சாரக் கட்டணங்களைக் குறைக்கும் வழிமுறைகள்

கனடாவில் தமிழர் அதிகமாக வாழும் ஒன்றாறியோ மாகாணத்தில்

* மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துக் கொள்ளும் திட்டம் (Electricity Support Program)

* மின் தொடர்பினை ஒரு வீட்டில் துண்டிக்கும் நிலைமை ஏற்படுமாக இருந்தால் அதிலிருந்து மீள்வதற்கு ஒரு சிறு பண உதவி. (Low Income Energy Assistance Program) என்பவற்றினை 'ஒன்றாறியோ மின்சக்தி மையம்' (Ontario Energy Board) நடைமுறை படுத்தி வருவதனை அறிந்து கொண்டீர்களா?

வீட்டில் வாழும் குடும்பத்தவர்களின் எண்ணிக்கை, அவர்கள் யாவரினதும் வருமானங்களினை அடிப்படையாக வைத்து செலுத்தவேண்டிய கட்டணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகைப்பணம் குறைத்துக்கொள்ளும் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

'Ontario Energy Board' என google இல் தேட தகவல்களை அறிந்து கொள்வதுடன், அதற்கு மனு செய்வதனை யும் உடனடியாக முன்னெடுக்கலாம்.

ontarioelectricitysupport.ca என்னும் மின்அஞ்சல் தொடர்பு மூலம் விண்ணப்பத்தினை அனுப்பலாம்.

இவ்இணையத் தளத்தினுள்ளிருந்து விண்ணப்பப்படிவத்தினை பிரதி எடுத்து நேரடியாகவும் விண்ணப்பிக்கலாம். ஒன்றாறியோ மின்சக்தி மையத்துடன் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நேரடியாகவும் தகவல்களைப் பெறலாம்.

தொலைபேசி : 1-855-831-8151

இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை ஊடாக நீங்கள் இதற்கு விண்ணப்பித்தால் விலை குறைப்பு கிடைக்குமா? என்பதனை இலகுவாகப் புரிந்துகொள்ளலாம்.

Effective May 1, 2017

### OESP Monthly Credit Amounts by Household Income Level

| Household Income (After Tax) | Household Size (Number of people living in household) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7+ |
| $28,000 or less | $40 | $45 | $51 | $57 | $63 | $75 | $75 |
| $28,001 – $39,000 | | $40 | $45 | $51 | $57 | $63 | $75 |
| $39,001 – $48,000 | | | $35 | $40 | $45 | $51 | $57 |
| $48,001 – $52,000 | | | | | $35 | $40 | $45 |

வீட்டிலிருப்போரின் எண்ணிக்கை, வீட்டிலிருப்போர் யாவரும் சேர்ந்து மொத்தமாக கனடாவின் வருமானவரி நிறுவனத்திற்கு (CRA - Canada Revenue Agency) சமர்பிக்கப்பட்ட மொத்த தேறிய வருமானங்களின் தொகைகள் என்ற தரவுகளின் அடிப்படையில் எவ்வளவு தொகை விலைக் குறைப்பு தங்களுக்குக் கிடைக்கும் என்பது இவ் அட்டவணையில் தெளிவுபடுத்தப்படுகின்றது.

இவை தவிர கடந்த மாதங்களின் வருமானக் குறைவு காரணமாக மின் கட்டணங்களை செலுத்தமுடியாத நிலைமை ஏற்பட்டு, மின் தொடர்புகள் துண்டிக்கும் நிலை உருவாகினால், அந்த இறுதிக்கட்ட ஆபத்திலிருந்து பாதுகாப்பதற்காக $500 பண உதவியை ஒரு முறை மட்டும் ஒன்றாறியோ மின்சக்தி மையம் வழங்கும். இதனையே Low Income Energy Assistance Program என குறிப்பிடப்படுவதுண்டு.


Ontario Energy Board
Commission de l'énergie de l'Ontario

இவைதவிர வீட்டு உரிமையாளராக உள்ள முதியோர், வலுவளர் குன்றியோர் (Disability people) போன்றோரும் மின்சாரக் கட்டணங்களில் விலைக்கழி வினை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட நிலையிலிருந்தும் இதுவரை இவ்விலைக் குறைப்புக்கு முயற்சிக்காதோர் இனிமேலாவது முயற்சி செய்து பார்க்கலாம்.







# நானிலம் போற்றும் நட்பு - 41



- அகணி -
authorakani@gmail.com

"சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு." (அதிகாரம் தீ நட்பு, குறள் 821) என்ற குறளிற்கு "அகத்தே பொருந்தாமல் புறத்தே பொருந்தி நடப்பவரின் நட்பு, தக்க இடம் கண்டபோது எறிவதற்கு உரிய பட்டடையாகும்." என்று உரையாசிரியர் மு. வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"உள்ளத்தில் நட்புக் கொள்ளாமல் உதட்டளவில் நட்புக் கொள்பவர், தக்க சமயத்தில் வெட்டுவதற்குத் துணை நிற்கும் பட்டடை போன்றவர்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"போலி நட்பு சமயம் வாய்க்கும்போது அடித்து நசுக்கும் கொல்லன் பட்டடையாகும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"மனதார இல்லாமல் வெளியுலகிற்கு நண்பரைப்போல் நடிப்பவரின் நட்பானது, ஒரு கேடு செய்வதற்குச் சரியான சந்தர்ப்பம் கிடைக்கும்போது இரும்பைத் துண்டாக்கத் தாங்கு பலகைபோல் இருக்கும் பட்டடைக் கல்லுக்கு ஒப்பாகும்" என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

உதட்டளவில் அன்றி உள்ளத்தில் நட்பு கொள்ளவேண்டும் என்ற அறிவுரையை இந்தக் குறள் கூறுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் ஐம்பத்தொன்றாவது பாடலைக் கவனிப்போம். இந்தப் பாடல் குன்றியனார் என்னும் புலவர் பாடிய பாட்டு. தலைவன் விரைவில் மணந்து கொள்ளவில்லையே என்று வருந்தும் தலைவிக்குத் தோழி கூறிய ஆறுதல் மொழியாக இந்தப் பாடல் உள்ளது. தோழி கூற்று. இந்தப் பாடல் நெய்தல் திணை சார்ந்தது.

"கூன்முள் முண்டகக் கூர்ம்பனி மாமலர்,
நூலறு முத்தின் காலொடு பாறித்
துறைதொறும் பரக்கும், தூமணல் சேர்ப்பனை
யானும் காதலென் யாயும் நனிவெய்யள்
எந்தையும் கொடீஇயர் வேண்டும்
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே."

தலைவனால், தன் காதலியைப் பகலிலும் காண முடியவில்லை, இரவிலும் பார்க்க முடியவில்லை. ஆனாலும் அவன் தலைவியை மணந்து கொள்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தான். எப்பொழுது திருமணத்தை நடத்தி வைப்பது என்பதைப் பற்றி தலைவன், தலைவியின் பெற்றோர்களுக்கு இடையில் எத்தகைய முடிவும் இன்னும் ஏற்படவில்லை.

ஆகவே திருமணநாள் நீண்டுகொண்டே போயிற்று. தலைவியோ இம்மாதிரிக் காலம் நீளுவதைப் பற்றிக் கவலை கொண்டாள் தலைவன் தன்னை விரைந்துவந்து வரைந்து கொள்ளவில்லையே என்று வாட்டங் கொண்டாள்.

தலைவியின் இந்தத் துயரத்தைக் கண்டாள் தோழி. அவள் மனங்குளிரும்படியாக அவளுக்கு நம்பிக்கை பிறக்க ஆறுதல் மொழிகள் பலவற்றைக் கூறினாள்.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

"வளைந்த முள்ளையுடைய, முண்டகம் மிகுந்த குளிர்ச்சியுள்ள கரிய மலர்கள் தொடுத்த நூல் அறுந்து சிந்தின முத்துக்களைப்போல, காற்றால் சிதறி, துறை தொறும் நீர்த்துறைகளில் எல்லாம் பரந்து கிடக்கின்ற, வெண்மையான மணல் பரந்த கடற்கரைத் தலைவனை, உன் கணவனாக்க நானும் விரும்புகின்றேன். நம் தாயும் அவனை மிகவும் விரும்புகின்றாள். நம் தந்தையும் அவனுக்கே உன்னை மணம்புரிந்து கொடுக்கவே விரும்புகின்றார். பழி தூற்றும் இவ்வூரில் உள்ளவர்களும், உன்னை அவனோடு இணைத்து உனக்கும் அவனுக்கும் காதல் உண்டென்று மொழிகின்றனர்."

"நீ விரும்பிய கணவனுக்கே உன்னை மணம் செய்துவைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆதலால் நீ வருந்தாதே" என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகின்றாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் ஐம்பத்திரண்டாவது பாடலைக் கவனிப்போம்.




இப்பாடல் பனம்பரனார் என்னும் புலவர் பாடிய பாட்டு. மணம் கேட்டு மகிழ்ந்த தலைவியைப் பார்த்து, "இந்த மகிழ்ச்சி என்னால் நேர்ந்தது" என்று தோழி கூறியது. இந்தப் பாடல் குறிஞ்சித்திணை சார்ந்தது.

"ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்
சூர், நசைந்து அனையையாய், நடுங்கல் கண்டே
நரந்தம் நாறும் குவையிரும் கூந்தல்!
நிரந்து இலங்கு வெண்பல் மடந்தை!
பரிந்தனென் அல்லனோ இறைஇறை யானே."

காதலன் தன் காதலிக்குத் தந்த உறுதிமொழியை மறக்கவில்லை. "உன்னை விரைவில் ஊரார் அறிய மணப்பேன் உடன் உறைந்து இல்லத்திலே இன்பந்துய்ப்பேன் இருவரும் இணைபிரியாக் காதலர்களாய் மகிழ்ந்து வாழ்வோம்" என்று அவன் அன்று சொல்லியபடி முயன்றான். அவனுடைய பெற்றோர்களிடம் பெண்கேட்டு முடித்துவிட்டான். விரைவில் அவர்கள் மணமக்களாகப் போகின்றனர்.

காதலன் செய்த முயற்சி எளிதிலே நிறைவேறத் துணை செய்தவள் தோழி. அவள் தலைவியின் பெற்றோரிடம் கொஞ்சம் கொஞ்சமாக அடிக்கடி உண்மையைக் கூறி வைத்திருந்தாள். தலைவியின் தாயார் அவள் காதலை நினைந்து கவலை கொண்டிருந்தபோது அதைத் தெய்வத்தின் கோளாறு என்று எண்ணி அதை நீக்கத் தெய்வத்திற்குப் பூசை செய்ய முயன்றனர். அப்பொழுது தோழி அவர்கள் நினைப்பது தவறென எடுத்துக் காட்டினாள். தலைவியின் துன்பத்திற்குத் தெய்வம் காரணம் அன்று. அவள் கருத்தைக் கவர்ந்த மலைநாட்டுத் தலைவன் ஒருவனே காரணம் என்ற உண்மையை எடுத்துரைத்தாள். அவர்களும் உண்மையறிந்து தலைவியை விரும்பிய அத்தலைவனுக்கு அவளை மணம் நேர்ந்தனர். தோழி செய்த இவ்வுதவி தலைவிக்குத் தெரியாது.

தான் விரும்பிய காதலன் தன்னை மணக்க முயல்கிறான். அவனுக்குத் தன்னைக் கொடுக்கப் பெற்றோர்களும் உடன்பட்டு விட்டனர் என்ற செய்தி அறிந்து தலைவி மகிழ்ச்சியடைந்திருந்தாள். அப்பொழுது தோழி தலைவியைப் பார்த்து, "நான் செய்த முயற்சியே உனக்கு இத்தகைய மகிழ்ச்சியை அளிப்பதற்குக் காரணம்" என்று கூறினாள்.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

"நரந்தம் பூவின் மணம் வீசும், அடர்ந்த நீண்ட கூந்தலையும், வரிசையாக விளங்குகின்ற வெண்மையான பற்களையும் உடைய, பெண்ணே, தன்னிடம் பொருந்திய ஆண்யானை, மிதித்த பள்ளத்திலே, தண்ணீர் நிறைந்து காணப்படும், மலையில் உள்ள தெய்வத்தால், விரும்பப்பட்டதைப் போன்றவளாய், நீ நடுங்குவதைக் கண்டு, நான் பல தடவை, உன் துயரத்தைக் கண்டு வருந்தி உன் தாயாரிடம் உண்மையை உரைத்தேன் அல்லவா?"

உன் துன்பத்தைக் கண்டு பொறுக்காமல் நான் உன் தாயாரிடம் உண்மையை உரைத்தேன்.

தலைவியின் மகிழ்ச்சியிலே தனக்கும் பங்குண்டு என்று தோழி கூறினாள். தலைவியுடன் சேர்ந்து மகிழ்ந்திருந்தாள்.

இந்தப் பாடல்கள் மூலமும் தலைவன் தலைவி வாழ்க்கையில் தோழிக்குள்ள தன்னலமற்ற அக்கறை நன்கு புலனாகின்றது.


நட்பின் பெருமை பற்றிக் குறுந்தொகையில் வரும் பாடல் சிலவற்றை இந்த இதழிலும் உரையாடினோம்.

தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையில் தோழியின் பங்கு எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது என்பதை குறுந்தொகையில் உள்ள சில பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நட்பின் பெருமை இவற்றால் நன்கு புலப்படுகிறது. சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நட்பு பற்றிய கருத்துக்களை இத்தொடர் கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)



# 75 ஆண்டுகள் கடந்தும் இலக்கியப்பணியில் வீணை மைந்தன்



T. சிவபாலு

தனது எழுத்து என்னும் நாதத்தால் வீணை மைந்தன் என்னும் புனைபெயரில் தன்னை வெளிப்படுத்திக்கொண்டு படைப் புலகில் தனக்கென ஒரு தனியிடத்தைத் தக்க வைத்துள்ளார் திரு.சண்முகராஜா. யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையைப் பிறந்தகமாகக் கொண்ட இவர் வெளி நாட்டில் கால்பதித்த பின்னர் தனது இலக்கிய ஈடுபாட்டை வெளிப்படுத்திவரும் இலக்கிய நண்பர்களில் முக்கியமானவராவார்.

எழுத்துத் துறையில் கால்பதித்து கவிதை, கட்டுரை, நாடகம் எனப் பல்துறைகளில் தன்னை ஈடுபடுத்தி வந்துள்ளார். ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேலாக பயணித்து வருகின்றார்.

நல்லதொரு கலை இலக்கிய ரசிகரான அவர் தமிழ் திரைத்துறையில் மிக ஈடுபாடு கொண்டவராக தியாகராஜ பாகவதர், சிவாஜிகணேசன், எம்.ஜி.ஆர்., ஜெமினி கணேசன், எஸ்.எஸ்.ஆர், சந்திரபாபு போன்றோரின் ஆற்றல்களைக் கண்டு வியந்ததோடு அவர்களது அகவாழ்வு பற்றியும் மிக ஆர்வத்தோடு கண்டறிந்து "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் எண்ணப்பாங் கோடு மற்றவர்களும் அறிந்து அனுப விக்கவைத்து வருவது பெரும்பேறாகவே வாசகர்களாலேயே பாராட்டப்பட்டுள்ளது.

பாரதியைச் சொல்லவந்த வீணை மைந்தன் தனது எழுத்துக்கு ஆதாரமாக கவியரசர் கண்ணதாசனை இழுத்து விடுகின்றார். அவரது அதீத இலக்கியத் திறனுக்கு அவரது வாசிப்புத்திறன் துணை போகின்றது என்பது வாசகர்களால் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும்.

"வான வீதியிலே<br>
பாரதியை கண்டேன்<br>
வைத்த விழி வாங்காமல்<br>
பார்த்தபடி நின்றேன்<br>
மோனவெளி வீதியிலே<br>
மூச்சடங்கி நின்றான்<br>
மூன்று தமிழ் ஆய்ந்த கவி<br>
முன் நடந்து சென்றேன்<br>
கூனலிளம் வெண்ணிலவின்<br>
குளிர் முகத்து நடுவே<br>
குத்துகிற மீசையையும்<br>
கூர் விழியும் கண்டேன்<br>
தேனமுதப் பாவலனின்<br>
சிந்தையிடை யாதோ<br>
தீராத துன்பநிலை<br>
சிந்துவதை கண்டேன்!

எனப் பாரதியைப்பற்றி கண்ணதாசன் பாடிய பாடலையே எடுத்துக்காட்டுகின்றார். ஒவ்வோர் இதழிலும் தனது படைப் பாற்றலுக்கு வலுச்சேர்க்கும் வண்ணம் கலைஞர் கருணாநிதி, எழுத்தாளர் ஜெயகாந்தன் போன்றோர் பாரதி பற்றிக் கொண்ட கருத்துகளை எடுத்துக்காட்டி தனது இலக்கியப் பணிக்கு மெரு கூட்டியுள்ளார்.

சிவாஜிகணேசனின் நடிப்புத்திறனில் மிகுந்த ஈடுபாடுகொண்டு வீணை மைந்தன் அவரோடு மிக நெருக்கம் கொண்டிருந்தார் என்பது அவரது எழுத்து களில் பிரதிபலிப்பதைக் காணலாம். வலதுகை கொடுப்பதை இடதுகை அறி யாது செய்தல் வேண்டும் என்பதுபோன்று நடிகர் சிவாஜிகணேசனின் கொடைத்திறன் பற்றிப் பாராட்டி எழுதியிருக்கின்றார். அவர்



ஏழைகளுக்கு உணவளித்தது மிக நெருக்கடிக்கு உட்பட்ட நண்பர்களுக்கு உதவியது எனப் பல்வேறு கோணங்களி லும் துருவித்துருவி ஆராய்ந்து வாசகர் களுக்கு மிக சுவாரஷ்யமாக எழுத்திலே வடிப்பதில் வல்லவராகத் திகழ்ந்து வருகின்றார்.

2011இல் தமிழர் தகவல் விருதினைப் பெற்றுக்கொண்டவேளை அவரது எழுத்து லகப்பணியில் வெள்ளிவிழாக் கொண்டாடும் நாயகராக விபரிக்கப்பட்டிருப்பது நினைவுக்கு வருகின்றது.

நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன் 'நான் வந்த பாதை' என்னும் நூலில் சிவாஜி கணேசன் திரையுலகில் புகுந்த நிலைமையை மிக நயமாகக் குறிப்பிட் டிருப்பதுபோன்று வீணை மைந்தனும் மிக நுணுக்கமாக அவரைப்பற்றி தனது எழுத்தில் கையாண்டுள்ளமை அவரது இலக்கிய இரசனைக்கும் எழுத்துக்கும் சான்றாக அமைந்துள்ளன.

பாரதியைப் பேசவந்த வீணை மைந்தன் பட்டிமன்றப் பேச்சாளர் பாரதி பாஸ்கரின் பெயருக்கான காரணத்தையும் தந்திருப் பார். அவரது எழுத்துக்கள் வீணை நாதமிசைப்பது போன்று வாசிப்பதற்கு இனிமை நல்குவன. வாசகருக்கு வாசிப்பைத் தூண்டும் எழுத்து நடை அவரது படைப்பாற்றலுக்கு வலுச் சேர்க்கின்றன.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் வீணை மைந்தன் முக்கியமானவர். எழுத்தாளர் இணையத் தின் தலைவராகப் பல ஆண்டுகள் பணி யாற்றி அதன் வளர்ச்சிக்கு அடிகோலி யவர். மொன்றியேலில் இலக்கியக் கூட்டங்களை ஒருங்கமைத்து நடத்தி வந்துள்ளதோடு பல சஞ்சிகைகள் இவரது பெயர் கூறும் வரலாற்றைத் தம்மகத்தே கொண்டுள்ளன. 1988இல் வெளியிடப்பட்ட 'எழில்' என்னும் மாதாந்தச் சஞ்சிகையில் இவரது எழுத்துக்கள் வடஅமெரிக்கா விலும் பிரபலமாகத் தொடங்கியது. 1990இல் வீணைக்கொடி என்னும் இதழை மொன்றியேலில் வெளியிட்டுள்ளார். வை. இ. மகேந்திரன் ரொறொன்ரோ வந்திருந்த வேளையில் அவரால் இவ்விதழ் அந்த அரங்கில் அவரால் அறிமுகப்படுத்தப் பட்டமை பெருமைக்குரியது. வாழ்வில் ஏற்பட்ட பொருளியல் நெருக்கடி வீணை மைந்தனையும் விட்டுவைக்கவில்லை. தொடர்ந்து இந்த இதழை அவரால் தாக்குப்பிடித்து வெளியிட முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பது தமிழ் வாசகர்களின் அக்கறை யின்மையை எடுத்துக் காட்டுகின்றது.

